அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

செப்டம்பர்–2023 | மரம் – 2 | கன்று – 9 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-

## உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரியதாயிருக்கும்.

(ஏசா. 54:13)



ஆசிரியர். J.ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

இந்த இதழில் வேதத்தில் உள்ள உவமைகள் அடிப்படையில் விளக்கக் கதைகளும், பொருள் தேடும் ஆய்வுக் கட்டுரைகளும், தொடர்கதைகளும் வழக்கம் போல இடம்பெற்றுள்ளன. சுய முன்னேற்றப் பகுதிகளுக்கு என தனிக் கவனம் செலுத்தப்பட்டு வேத வாக்கியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த இதழை சிறார் மட்டுமின்றி அவர்தம் பெற்றோர்களும், தாத்தா பாட்டிமார்களும், இவர்களுடன் சிறுவர் ஊழியங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள பெற்றோர்களும் இவ்விதழை படிப்பதால் பெற்றோர் பகுதியில் பிள்ளையாண்டானை நடத்த வேண்டிய வழிமுறைகளும் இடம்பெற்றுள்ளது. பொழுதுபோக்குவதற்கும், சிந்தனையை தூண்டுவதற்கும் வினா விடை பகுதிகளும், வர்ணம் தீட்டுவதற்கான பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. உங்கள் கருத்திற்கும் மனதிற்கும் இதமளிக்கும் வகையில் வண்ணத்தாளில் அச்சிடப்பட்டுள்ள இவ்விதழை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். நிதிச்சிக்கல் போன்ற காரணங்களினால் அச்சிடுவதை தவிர்த்து, தற்போது மின் இதழாகவும், மென் நகலாகவும் உங்கள் கைகளில் தவழ செய்துள்ளோம். இவ்விதழை நீங்கள் உங்கள் உதாரத்துவமான சந்தாக்களால் ஆதரிப்பதோடு உங்கள் நண்பர்களையும் சந்தாதாரர் ஆக உற்சாகப்படுத்துங்கள். அது மட்டுமல்ல, இவ்விதழின் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். கோடை காலம் நிறைவடைந்து மாரிக்காலம் துவங்கியுள்ளது. உங்கள் ஆன்ம ஆரோக்கியத்தை அக்கறை எடுப்பது போல, சரீர பாதுகாப்பிலும் முன்னுரிமை கொடுங்கள். எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# அசோக மரம்

குடும்பம்: Fabaceae

தாவரவியல் பெயர்: Saraca Asoca

**அசோக மரம்,** நமது தேசத்தின் பாரம்பரிய மரம். சங்க இலக்கியங்களில் இதன் சிறப்பும், பெருமையும் அதிக அளவில் விவரிக்கப்பட்டுள்ளது. பூ, பட்டை மருத்துவ பயன் கொண்டவை. இதன் இலைகள் நீண்ட கூட்டிலைகள் அமைப்பு கொண்டது.

இந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலை, தமிழகத்தின் மலை சார்ந்த பகுதிகளிலும் வளரும். சிலர் தோட்டங்களில் வளர்த்து வருகின்றனர். இதை அசோகு, ஆயில், செயலை, பிண்டி, காகோளி என்று பல்வேறு பெயர்களில் அழைப்பர். பிண்டி என்ற அசோகு வேறு, நெட்டிலிங்கம் மரம் வேறு.



இதன் ஒரு பூ, பெரிய பூங்கொத்து போன்று செம்மை நிறத்தில் அழகுடன் காட்சியளிக்கும். அசோக மரங்கள் மிக அரிய பயன்களை பெண்களுக்குத் தரவல்லவை. பெண்களின் உடல் நலம் காக்கும் தன்மைமிக்கவை. பெண்களுக்கான மரம். இதன் பட்டையும் மலர்களும் நமது மருத்துவத்தில் பயன்படுகிறது. இதன் தற்போதைய நிலைமை அழிந்துவரும் இனத்தில் விளிம்பு நிலையில் உள்ளது. கண்டிப்பாக ஒவ்வொரு வீடுகளிலும் இருக்க வேண்டிய மரம் அசோகமரம்.



100 கிராம் அசோக மரப்பட்டையை 400மிலி தண்ணீரிலிட்டு 100மிலி ஆகும்வரை காய்ச்சி வடிகட்டி 100மிலி பாலில் கலந்து நாள்தோறும் மூன்றுவேளை குடித்து வந்தால் பெண்களின் பெரும்பாடு தீரும். இதை வயிற்றுகடுப்பு, மூலம், கட்டிகள் உள்ளவர்கள் குடித்து வந்தால் அவை குணமாகும்.



அசோக பூ, மாம்பருப்பு சமஅளவு எடுத்து பொடித்து 3 சிட்டிகை அளவு பசும் பாலில் கொள்ள சீதபேதி, ரத்தபேதி நீங்கும். அசோக பட்டை, மாதுளை வேர்பட்டை, மாதுளம் பழஓடு சமஅளவு பொடி செய்து அதில் 3 சிட்டிகை காலை மாலை வெந்நீரில் கொள்ள கருச்சிதைவு வயிற்றுவலி, கர்ப்பச்சூலை, வாயுத்தொல்லை நீங்கும். தொடர்ந்து 120 நாட்கள் சாப்பிட குழந்தைபேறு உண்டாகும்.


அசோக பூவை 120 கிராம் எடுத்து நுண்ணியதாய் பொடித்து கால் படி தண்ணீர்விட்டு கலந்து சாப்பிட ரத்தக்கழிச்சல், ரத்தமும் சீழுங்கலந்த கழிச்சலும் போகும்.



மாதவிலக்கின் போது ஏற்படும் தாங்கமுடியாத வலிக்கு 100 கிராம் அசோக மரப்பட்டைத்தூளுடன் 25 கிராம் பெருங்காயத்தூளைக் கலந்து அதில் 2 கிராம் எடுத்து சிறிது பசும் வெண்ணெயில் குழைத்து நாள்தோறும் மூன்றுவேளை சாப்பிட ஓரிரு மாதங்களில் மாதவிடாயின் போது ஏற்படும் தாங்க முடியாத வயிற்றுவலி முற்றிலும் நீங்கும்.

கால்கிலோ அசோக மரப்பட்டை, மாவிளங்கப்பட்டை 100 கிராம், சுக்கு 25 கிராம், கருஞ்சீரகம் 25 கிராம் சேர்த்து மைய அரைத்துக் கொள்ள வேண்டும். இதில் 3 கிராம் அளவில் எடுத்து காலை மாலை இரண்டு வேளையும் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர மாதாந்திரவிலக்கு ஒழுங்காகும்.

அசோக மரத்துப் பூக்களை சேகரித்து நீரிலிட்டுக் காய்ச்சிக் குடிப்பதால் அடிபட்ட காயம், அதனால் மனநிலையில் ஏற்பட்ட பாதிப்பு ஆகியன குணமாகும். அசோக மரத்துப் பூவின் நீர் ஆழ்மனத்தில் கவலை, பதட்டமான உணர்வு ஆகியவற்றையும் கட்டுப்படுத்தக்கூடியது. அசோக மரப் பூக்களையோ, பட்டையையோ குடிநீராக்கிக் குடிப்பதால் வயதானவர்களுக்கு ஏற்படும் பல்வேறு உடல் நோய்களும் மன நோய்களும் குணமாகிறது.



அசோக மரத்தின் மருந்துண்ணும் காலத்தில் மாலையில் சிறிது கடுக்காய்த்தூளை சாப்பிட்டுவர மலச்சிக்கல் ஏற்படாது.

''அவன்... காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும்'' (ஏசாயா 44:14) என்று அசோக மரம் குறித்து வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதை பார்க்கலாம்.

தேவன் படைத்த மருத்துவ குணமிக்க இம்மரம் சோகத்தை மாற்றி அசோகத்தை (மகிழ்ச்சியை) தருவதால் அசோக மரம் என அழைக்கப்படுகிறது. இம்மரம் போல நாமும் பிறரது சோகத்தை மாற்றி, பிறரை மகிழ்ச்சியடையச் செய்து, நாமும் மகிழ்ச்சியடைவோம்.



# நெட்டிலிங்க மரம்

அசோகமரம் என்றவுடன் பொதுவாக நம் நினைவிற்கு வருவது நெட்டிலிங்க மரம் தான். உயரமாக இருக்கும். பச்சை நிற பூக்களை உடையது. காலப்போக்கில் அந்த உண்மையான மருத்துவ குணமிக்க அசோகமரத்தை விட்டு நெட்டிலிங்கத்தை அசோகமரம் என்று பெரும்பாலானவர்கள் நம்பிக் கொண்டிருப்பது வேதனை தரும் விஷயம்.

# பராக்கிரமசாலி சிம்சோன்

**1-59 புள்ளிகளை இணைத்து சிம்சோன் சண்டையிட்டு ஜெயித்த விலங்கினை கண்டுபிடிக்கவும்.**



தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

காய்பா மனதுக்குள் திட்டமிட்டான். ஏன் சாட்சிகளை அழைக்கவேண்டும். இயேசுவையே விசாரிக்கலாமே. அவர் மூலமாகவே அவருடைய குற்றத்தை நிரூபிக்கலாமே. இறைவாக்கினர் என்றால், பெரிய வல்லமையுடையவர் என்றால் அவர் பொய் சொல்லப் போவதில்லையே. காய்பா எண்ணினான். மெல்ல மெல்ல இயேசுவிடம் வந்தான்.

'சரி.. ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல். நீ தேவகுமாரனாகிய கிறிஸ்துவா?' காய்பா துருப்புச்சீட்டுக் கேள்வியை எடுத்து இயேசுவின் முன்னால் விரித்தான். இயேசு மீண்டும் அவன் கண்களைப் பார்த்தார்.

'நீர் தான் சொல்லுகிறீர்' இயேசுவின் பதில் தெளிவாக வந்தது. தலைமைச் சங்கத்தினர் ஆச்சரியக் குரல்களை மெலிதாக எழுப்பினர்.

காய்பா இயேசுவின் பதிலில் திருப்தியடையவில்லை.

'தெளிவாகச் சொல்லுங்கள். நீர் கிறிஸ்துவா?'

'ஆம். நான் தேவகுமாரனாகிய கிறிஸ்து தான். மனுஷ குமாரன் தேவனின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பதையும், வானமேகங்களின் மீது வருவதையும் நீங்கள் காண்பீர்கள்' இயேசுவின் குரல் உறுதியுடன் ஒலித்தது.

காய்பா தன்னுடைய மேலுடையைக் கிழித்தான். 'இதோ.. நீங்களே கேட்டீர்களே. நம்முடைய தேவனை இவன் பழித்துரைத்ததை நீங்களே கேட்டீர்களே. இனிமேல் சாட்சிகள் எதற்கு? இவனை என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்' பிரதான ஆசாரியன் கொக்கரித்தான். அவனுடைய உள்ளம் இயேசுவை மாட்ட வைத்த களிப்பில் துள்ளியது.

சாட்சிகளால் நிரூபிக்கப்படாமல் போன குற்றத்தை இயேசுவே ஒப்புக் கொண்டதில் கூட்டத்தினர் அதிர்ந்தனர். வழக்கத்துக்கு மாறான காட்சி.



‘இப்போது என்ன சொல்கிறீர்கள்’ காய்பா அவையைப் பார்த்துக் கேட்டான்.

‘இயேசு குற்றவாளி தான்’ அவை ஒத்துக் கொண்டது.

வாக்கெடுப்பு நடந்தது. அதிலும் காய்பா தன்னுடைய வஞ்சக மூளையைப் பயன்படுத்தினான். முதியவர்கள் துவங்கி இளையவர் வரை வாக்கெடுப்பு நடத்துவது தான் முறை. ஆனால் ஒருவேளை முதியவர்கள் இயேசுவுக்கு ஆதரவாக வாக்களித்தால், பின்பு வருபவர்களும் இயேசுவுக்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடும் என்று பயந்தான். எனவே இளையவர்களிடமிருந்து வாக்கு ஆரம்பமானது. இளையவர்கள் எல்லாம் காய்பாவின் ஆட்கள்!



இயேசு குற்றவாளிதான். தீர்ப்பளிக்கப்பட்டது. அதற்குள் கூட்டத்தினர் பலர் இயேசுவை நோக்கி முண்டியடித்து ஓடினர்.

‘பளார்..’ எங்கிருந்தோ ஒரு முரட்டுக்கரம் இயேசுவின் முகத்தைத் தாக்கியது.

‘தீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவே.. உம்மை அடித்தவனுடைய பெயரை தீர்க்கதரிசனமாய்ப் பார்த்துச் சொல்லுங்கள் பார்ப்போம்’ ஏளனக் குரல்கள் எழுந்தன.

பின்புறமிருந்து இயேசுவின் முதுகில் வலிமையான கரங்கள் தாறுமாறாய் இறங்கின. அவருடைய முகத்தின் மீது எச்சில் உமிழப்பட்டது. கால்கள் அவருடைய உடம்பின் மீது நீண்ட நாளைய வைராக்கிய வெறியுடன் உதைத்தன. இயேசு நிலை தடுமாறி விழுந்தார்.

‘தேவகுமாரனே.. விழுவது உமக்கு அழகா?’

‘என்ன இது? தேவகுமாரனுக்கு தன்னுடைய கைக்கட்டை அவிழ்க்கக்கூட முடியவில்லையா?’

‘தேவகுமாரனுக்கு வலிக்காதே.. நன்றாக அடியுங்கள்’ ஏளனக் குரல்கள் அறை முழுவதும் ஒலித்தன. காய்பாவின் முன்னிலையிலேயே இயேசு தாறுமாறாய் அடிக்கப்பட்டார். அவருடைய உதடுகள் கிழிந்து இரத்தம் வழிந்தது. உடலெங்கும் வலிமையான அடிகளை வாங்கிய வலி.

தங்கள் ஆத்திரத்தை இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த அத்தனை விரோதக் கைகளும் இயேசுவை அடித்தன. தங்கள் தலைமைக்கு எதிராக எச்சரிக்கைக் குரல்களை எழுப்பிய இயேசுவை அத்தனை தலைவர்களும் நையப் புடைத்தனர். இயேசு அமைதிகாத்தார்.

‘இவனை ஆளுநர் பிலாத்துவிடம் கூட்டிக் கொண்டு போகவேண்டும். அதன்பின்பு இவனுக்கு என்ன தீர்ப்பு கிடைக்கும் என்பது தெரியாது. எனவே இப்போது தான் நமக்கு வாய்ப்பு. நன்றாக அடியுங்கள். இவன் ஒருவேளை விடுதலை செய்யப்பட்டால் கூட நாளை இவன் நமக்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது.’ தகவல் பரிமாறப்பட்டது. இயேசுவின் உடலெங்கும் இரத்தக்காயங்கள்.

தொடரும்...



கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ 9003067777

G Pay 98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

# ஒட்டகம்

**ஒட்டகம்** என்பது பாலைவனங்களில் வாழும் ஒரு தாவர உண்ணி (Herbivores). Camelidae குடும்பத்தைச் சேர்ந்தது. குட்டிகளை ஈன்று பாலூட்டிகள் (Mammals) வகையை சார்ந்த ஒரு விலங்கு. ஒட்டகத்தை இறைவனின் பரிசு என்று அரேபியர்கள் அழைக்கின்றனர். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. போக்குவரத்து வசதிகளற்ற பழங்காலத்து யூதர்களுக்கு கோவேறுக் கழுதை எப்படி போக்குவரத்து சாதனமாக பயன்பட்டதோ, அவ்வாறே பறந்து விரிந்த மணற்பாங்கான பாலைநிலத்தில் பயணம் செய்ய அரேபியர்களுக்கு ஒட்டகமானது அருஞ்சாதனமாக விளங்கியது. பண்டைக்காலத்தில் குதிரைப்படையைப் போல ஒட்டகப்படையும் பல நாடுகளில் இருந்துள்ளன. மேலும் ஒட்டகங்கள் அவற்றின் பால், இறைச்சிக்காகவும், சுமைகளை ஏற்றிச் செல்லவும் பயன்படுகின்றன.

ஒட்டகங்களை மனிதர்கள் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு பழக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவை ஆசியா, வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள பாலைநிலங்களை தாயகமாகக் கொண்டவை. இந்தியாவில் 80% ஒட்டகங்கள் பெரும்பாலும் ராஜஸ்தான் பாலைவனப் பகுதியில் உள்ளன. இவை சராசரியாக 30 ஆண்டுகள் முதல் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

மூன்று வகையான ஒட்டகங்கள் உயிருடன் உள்ளன. ட்ரோமெடரி, பாக்டீரியன் மற்றும் காட்டு பாக்டீரியன். இதில் காட்டு பாக்டீரியன் ஒட்டகங்கள் சிறிய சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளன. ஒட்டகங்கள் ஒரு திமில் கொண்ட ஒட்டகம் (Dromedary camel), இரண்டு





ஒற்றைத் திமில் ஒட்டகம்
(Camelus dromedarius)



இரட்டைத்திமில் ஒட்டகம்
(Camelus bactrianus)

திமில் கொண்ட ஒட்டகம் (Bactrian Camel) என இரண்டு வகைகளாகும். உலகில் உள்ள ஒட்டகங்களில் 90% வீதமானவை ஒரு திமில் கொண்ட ஒட்டகங்களாகும்.

ஒரு திமில் கொண்ட ஒட்டகங்கள் 'அரேபியன் ஒட்டகங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, இந்தியா போன்ற பிரதேசங்களில் அதிகளவாக காணப்படுகின்றன.

இரண்டு திமில் கொண்ட ஒட்டகங்கள் 'மங்கோலியன் ஒட்டகங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் மத்திய ஆசியா, கிழக்காசியா போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றன.

பாக்டீரியன் ஒட்டகங்கள் 300 முதல் 1000 கிலோ வரை எடையுள்ளதாக இருக்கும். ட்ரோமெடரி ஒட்டகங்களின் எடை 300 முதல் 600 கிலோ வரை இருக்கும். முழுமையாக வளர்ந்த ஒட்டகங்கள் 3 மீட்டர் நீளமும், 2 மீட்டர் உயரமும் இருக்கும். பார்ப்பதற்கு சாதுவான விலங்காக இருந்தாலும் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் தன்மை கொண்டவை. 200 கிலோ வரையிலான எடையைச் சுமந்து கொண்டு 50 கிலோ மீட்டர் தூரம் வரை நடக்கக்கூடியது. ஒட்டகத்தால் சுமார் 375 முதல் 600 பவுண்டுகள் சுமக்க முடியும்.

ஒட்டகத்தில் மிகப்பெரிய சிறப்பு என்று சொன்னால், கொதிக்கும் மணலிலும் $50^0$ செல்சியஸ் வெப்பத்திலும், அவை நீண்ட நாட்கள் நீரில்லாமல் வாழக்கூடிய உயிரினமாகும். அதாவது ஐந்து நாட்கள் கூட நீரில்லாமல் பாலைவனத்தில் வாழக்கூடிய தன்மைகளை கொண்டுள்ளது. கடும் குளிர் காலத்தில் உணவின்றி, நீரின்றி ஆறு மாதம் வரை கூட இருக்கும். மேய்வதற்குப் புல் போன்ற உணவு கிடைத்தால் 10 மாதங்கள் வரையிலும் கூட நீர் அருந்தாமல் இருக்கக்கூடியது. ஒட்டகங்கள் ஒரே நேரத்தில் 100 லிட்டர் தண்ணீர்வரை குடிக்கும்.

கண்கள் மற்றும் காதுகளில் வீசும் புழுதிப் புயலில் இருந்து பாதுகாக்க ஒட்டகத்திற்கு நீண்ட கண் இமைகள் மற்றும் ரோமங்கள் உள்ளன. ஒட்டகங்களுக்கு மெல்லிய, பிளவுபட்ட நாசித் துவாரங்கள் உள்ளன. புழுதிப் புயல் விளைவாக ஏற்படும் மணல் மற்றும் தூசி துகள்களைத் தடுக்க நாசித் துவாரங்கள் மூடிக் கொள்ளும்.

ஒட்டகத்தின் உதடுகள் ரப்பர் போன்ற அமைப்பை கொண்டது. இதன் காரணமாக அதனால் குத்தும் முட்களை கொண்ட சப்பாத்திக்கள்ளி, கற்றாழை போன்றவற்றை உண்ண முடிகிறது. அந்த விசேஷ உதட்டமைப்பு அதனுடைய நாக்கினை நீட்டாமல் அப்படியே மேய உதவுகிறது. மேலும், பல மைல்களுக்கு அப்பால் உள்ள நீரை கூட தன் மோப்ப சக்தியால் அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தது.

ஒட்டகத்திற்கு இருக்கும் சிறுநீரை போல எந்தவிதமான விலங்குகளுக்கும் இருக்காது. ஒட்டகத்தின் சிறுநீரகத்தில் 40% அதிகமான கழிவுகளும், மிக குறைந்த அளவிலான நீரும் இருக்கிறது. மிகச் சிறிய அளவு சிறுநீரை மட்டுமே வெளியேற்றுகின்றன. அவற்றின் சாணம் வறண்டு இருக்கும். அது மட்டுமல்லாமல் அவை தன் உடம்பிலிருந்து வியர்வையை வெளியேற்றுவது இல்லை. ஒட்டகம் அதன் உடலிலிருந்து அதிக தண்ணீரை இழக்காததால், அதனால் தண்ணீர் குடிக்காமல் பல நாட்கள் உயிர் வாழ முடிகிறது.

ஒட்டகத்தின் முதுகு பகுதியில் அமைந்துள்ள கூம்பு போன்ற அமைப்பை திமில்கள் (Hump) என்று சொல்லப்படுகிறது. ஒட்டகமானது அதற்கு தேவைப்படும் தண்ணீரையும், உணவுகளையும் அதன் தசை முதுகு பகுதியில் சேமித்து வைத்துகொள்ளும். ஒட்டகத்தின் திமில்கள் உணவுகளை சேமிக்கும் பொழுது 45 கிலோ எடை வரையும் தண்ணீரையும், உணவுகளையும் சேமித்து வைத்துக்கொள்ளும்.


கடுமையான கோடையில் கூட குறைந்த அளவு நீரை குடித்துவிட்டு தன் குட்டிக்கும் பாலை கொடுத்துவிட்டு 15லிருந்து 20 லிட்டர்வரை பிறருக்கும் பால் கொடுக்கக்கூடியது. தொடர்ந்து பத்து நாட்கள் வரை நீர் குடிக்காவிட்டாலும்கூட அதே தரத்தில் அதே அளவு பாலை கொடுக்க முடியும். ஒட்டகப் பாலில் பசும்பாலை விட மூன்று மடங்கு வைட்டமின் 'C' அதிகம் உள்ளது. இதில் கொழுப்பு மற்றும் பிளாக்ரோஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து அதிக அளவு உள்ளது. டயாபிடீஸ் போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு ஒட்டகப்பால் சிறந்தது. இது காய்கறிகள், பழங்களுக்கு நிகரான அளவு பாலைவன மக்களின் பிரதான உணவாக ஒட்டகப்பால் இருந்து வருகிறது. சோமாலியா, சவுதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகளில் ஒட்டக இறைச்சி உண்ணப்படுகிறது.

ஒட்டகங்கள் மென்மையான மணலில் எளிதாக நடக்க உதவும் பெரிய மற்றும் தட்டையான பாதங்களைக் கொண்டுள்ளன. மேலும், அதன் தட்டையான பாதங்கள் உடல் எடை மற்றும் அது சுமக்கும் எடைக்கு எதிராக மணலில் மூழ்குவதை நிறுத்த உதவுகின்றன. அதோடு மணலின் வெப்பத்திலிருந்தும் பாதுகாக்கின்றன. எனவே ஒட்டகங்கள் 'பாலைவனத்தின் கப்பல்' (Ship of Desert) என்று அழைக்கப்படுகின்றன. ஒட்டகம் வேகமாக ஓடுவதால் அரேபிய நாடுகளில் ஒட்டகப் பந்தயங்கள் நடத்தப்படுவதுண்டு. ஒட்டகப் பந்தயத்தை வைத்து உலகசாதனைகளும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

யோபுவுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள்; அதினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான் (யோபு 1:3). யோபு 3000 ஒட்டகங்கள் வைத்திருந்ததாக வேதத்தில் வாசிக்கிறோம். ஒட்டகம் அந்நாட்களில் ஆஸ்திகளுள் ஒன்றாக பார்க்கப்பட்டது.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊருக்கு புறப்பட்டுப்போய், தன் எஜமானுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் பார்க்கச் சென்ற நிகழ்வை ஆதியாகமம் 24ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.

# ‘இறைவனின் பரிசாம்’ ஒட்டகம், பாலைவனத்திற்கு செல்ல வழிகாட்டுங்கள்



# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். - அப்போஸ்தலர் 16:31




என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. - பிலிப்பியர் 4:13




உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். - யாக்கோபு 1:5




உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள். - உபாகமம் 28:7

# கேள்வியும் வேள்வியும் Q&A

**நான் இஸ்லாமிய சமயத்திலிருந்து கிறித்தவ நம்பிக்கையை பின்தொடரும் தமிழன். இதையறிந்த என்னுடைய சக இஸ்லாமிய நண்பன் ஒருவன், நான் பைபிளை மூல மொழியில் படிக்காமல், மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் வேதாகமத்தை படிப்பதினால் என்னை குற்றப்படுத்துகிறார். இதற்கு என்ன பதில் சொல்வது?**

– அப்துல் சமது, புதுப்பேட்டை, சென்னை

அன்புடைய தம்பி சமது அவர்களுக்கு, வணக்கம். மூன்று மாதங்களுக்கு முன்பே உங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றிருந்தாலும் உடனே பதிலளிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வருந்துகிறேன்.

உங்கள் நண்பரின் கேள்வி பொருளற்றதாக இருந்தாலும் எதார்த்தமான முறையில் வினவியுள்ளார். அது ஒன்றும் பிழையல்ல. வேதங்களை மூல மொழியில் படிப்பதால் எந்த தவறும் இல்லை, ஆனால் அதனால் என்ன பயன்?

பைபிள் என்பது தேவன் நமக்காக கொடுத்திருக்கும் வேதம், அதனை படிக்கவேண்டும், கேட்கவேண்டும், கீழ்படியவேண்டும் என்பதே முக்கியமானதாகும். நாம் வேதம் சம்மந்தப்பட்டு எதை செய்தாலும், அது நமக்கு புரியவேண்டும், கண்மூடித்தனமாக எதையும் செய்யக்கூடாது.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது (வெளி 1:3). ஆக, கீழ்படியவேண்டுமென்றால் பொருள் புரியவேண்டுமல்லவா? புரியாமல் படித்தால் எப்படி கீழ்படிய முடியும்?

மூல மொழியில் படித்தால் தான் நல்லது என்று சொல்லும் வாதத்தில் உள்ள வேடிக்கை என்னவென்றால், ‘கட்டளை இன்னதென்று புரியவில்லையென்றால் அதற்கு எப்படி கீழ்படிவது’? சுவரில்லாமல் சித்திரம் வரைய முயலும் மடமைக்கு இது சமமாகும்.



பைபிளின் மூல மொழிகளாகிய எபிரேயம், கிரேக்கம் போன்றவைகளை படிக்க மட்டும் கற்றுக்கொண்டு, பைபிளின் வசனங்களின் பொருளை புரிந்துக்கொள்ளாமல் படித்தால் ஒரு பயனும் இல்லை. மேலும், எல்லா மக்களுக்கும் எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளை கற்றுக்கொடுக்க முயலுவது முட்டாள் தனமான செயலாகும்.

யார் வேதாகம கல்லூரியில் படிக்கிறார்களோ, யாருக்கு எபிரேய, கிரேக்க மொழி கற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆர்வமுள்ளதோ, அவர்கள் மூல மொழிகளை கற்பது நல்லது. ஆனால், சாதாரண மக்கள் மூல மொழியை நிச்சயம் கற்கவேண்டும் என்று சொல்வது சரியானது அல்ல.

இந்த முட்டாள் தனத்தை சில பொய்யான மதங்கள் செய்கின்றன. உதாரணத்திற்கு: இஸ்லாமைச் சொல்லலாம். அரபியில் குர்ரானை படித்தால் தான் நன்மை என்று இஸ்லாம் சொல்கிறது, இந்திய முஸ்லிம்களில் 99% சதவிகித முஸ்லிம்களுக்கு அரபி தாய்மொழி கிடையாது. அரபி மொழி குறித்த இலக்கிய அறிவும் கிடையாது. இவர்களில் அநேகர் அரபியை படிக்க மட்டும் கற்றுக்கொண்டு, குர்ரானை படிக்கிறார்கள். அவ்வளவே.

ஆனால், கிறிஸ்தவம் உண்மையான மார்க்கம் ஆகும். நம் தேவனுக்கு உலகில் உள்ள அனைத்து மொழிகளும் தெரியும், அவரிடம் ஜெபிக்கும் போதும், ஆராதிக்கும் போதும் நமக்கு என்ன மொழி தெரியுமோ அதனை பயன்படுத்தினால் போதுமானது.

எனவே, உங்கள் முஸ்லிம் நண்பரிடம் சென்று, 'நாங்கள் தான் சரியான வழியில் வேதத்தை படிக்கிறோம், நீங்கள் செய்வது தவறானது என்றுச் சொல்லுங்கள்'.

குறிப்பு: எந்த உலக மதங்களில் மூல மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, சாதாரண மக்கள் கூட அதே மூலமொழியில் மந்திரங்களை, ஸூரா என்று சொல்லப்படும் குர்ரான் வாசகங்களை ஓதினால் தான் அது இறைவனை சென்றடையும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட மதங்களை பின்பற்றும் மக்கள் அறியாமையிலேயே இருப்பார்கள், கேள்வி கேட்கமாட்டார்கள். புரிந்தால் தானே மனிதன் கேள்வி கேட்பான், ஒன்றுமே புரியவில்லையென்றால், கேள்வி கேட்காமல், தலையாட்டிக்கொண்டே இருப்பான். இந்த நிலை கிறிஸ்தவத்தில் இல்லை.

பைபிள் போதிக்காத ஒன்றை ஒரு போதகர் போதிக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம், உடனே அடுத்த நாளே யுடியூபில் அந்த போதகருக்கு எதிராக அநேக கேள்விகள் குவியும் ஏன் என்று இப்போது புரிகின்றதா?

மேலும், அந்த கேள்விகளை கேட்பவர்கள் சாதாரண விசுவாசிகளாக இருந்தால் தாய்மொழியிலோ அல்லது தமக்கு நன்கு பரிட்சயப்பட்ட மொழியை அறிந்தவர்களாகவோ இருப்பதுதான் முதன்மைக் காரணம். நமக்கு தெரிந்த மொழியில் நம் வேதத்தை வாசிப்பதினால் தான் இன்னும் தேவனைக் குறித்து வேதம் கற்பிக்கும் பாடங்களை நாம் தெளிவாக அறிந்துணர முடியும். இவ்வகையான போக்கு இஸ்லாமிலும் சரி, இந்து மதத்திலும் சரி, இதற்கு சாத்தியமில்லை. ஏனென்றால், அனேகருக்கு சமஸ்கிருதமும், அரபியும் தெரியாமல் இருப்பது தான் அடிப்படை காரணம். மொழிகளைக் கடந்து நாம் அறிந்த மொழிகளின் வழியாக இறைவனை அறிய முயற்சிப்பதே சிறந்ததொரு வழியாகும் என்று உங்கள் நண்பருக்கு சொல்லுங்கள். கடிதத்தின் பின்பகுதியில் நீங்கள் குறிப்பிட்ட பகுதியை படிக்கும் போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. நீங்கள் படிக்கும் பள்ளியில் உங்கள் கைகளில் பரிசுத்த வேதாகமத்தின் தமிழ் பிரதி கிடைக்க காரணமான கிதியோன் சங்கத்தாரை நினைத்து கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறேன்.

# பொருளறிவோம்

உலகின் வரலாற்றினை தெளிவாக அறிந்துக் கொள்ள வேண்டும் என்றால் தமிழையும் தமிழின் வரலாற்றையும் அறிந்து இருக்க வேண்டியத் தேவை இருக்கின்றது. உதாரணமாக ஒரு வார்த்தையைக் காணலாம்.


கோவேறு கழுதை = கோ + ஏறிய + கழுதை. அதாவது அரசன் ஏறிய கழுதை என்றே பொருள் தரும் ஒரு தமிழ் சொல்.

இதனை ஒன்று ஒரு காலத்தில் அரசர்கள் கழுதையில் வலம் வரும் பழக்கத்தினை உடையவர்களாக இருந்தனர் என்று பொருள் கொள்ளலாம். அல்லது ஒரு காலத்தில் வாழ்ந்த மாபெரும் அரசர் அல்லது தலைவர் கழுதையில் ஏறி உலா வந்தார். அதனைக் குறிக்கவே அக்கழுதை கோவேறுக் கழுதை என்று பெயர் கொண்டது என்றும் பொருள் கொள்ளலாம்!

வேதாகமத்தில் இயேசு கழுதை மீது ஏறிச் சென்றார் என்றும் அவரை அரசர் என்றே மக்கள் அழைத்தனர் என்றும் குறிப்புகள் வருகின்றன. இந்நிலையில் கோவேறுக் கழுதை என்றச் சொல்லுக்கு காரணம் என்ன? அப்பெயர் எக்காலத்தில் இருந்து பயனில் இருக்கின்றது என்றும் நாம் காண வேண்டி இருக்கின்றது.

இதனைப் போன்றே பல விடயங்கள் இருக்கின்றன. சங்க காலப் புலவர்களில் ஒருவருக்கு மட்டுமே 'திரு' என்னும் சிறப்பு பட்டம் வழங்கப்பட்டு இருக்கின்றது. அவரது பெயர் 'திருத்தாமனார்'. இது தோமாவைக் குறிக்குமா என்பது ஆராய்ச்சிகளுக்கு உட்பட்டது.

மேலும் இன்றைக்கு இந்தியாவில் அதிக அளவில் கிடைக்கப்பட்டு இருக்கும் கல்வெட்டுகளும், சுவடிகளும் தமிழிலேயே கிட்டப்பட்டு இருக்கின்றன. ஆயினும் அவைகள் படிக்கப்படாமலும் பராமரிக்கப்படாமலும் அழிந்துக் கொண்டு இருக்கின்றன. இல்லையேல் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அவைகள் அனைத்தும் படிக்கப்படாமல் நாம் வரலாற்றினை முழுமையாக அறிந்துக் கொள்ள முடியாது.



கோவேரி கழுதைகளுக்கு Beast of burden என்று சில நாடுகளில் அழைக்கிறார்கள். இது ஒருவகை பாலூட்டி. காலில் ஒற்றைக் குளம்புள்ள EQUUS பேரினத்தைச் சார்ந்தது. MULE என்பது சரியான சொல்லாகும்.

இவை பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் செயற்கை கருவூட்டல் முறையில் தோன்றும் ஓர் இனமே. இவைகள் கழுதையை விட தோற்றத்தில் பெரியனவாகவும் குதிரையை விட உயரத்தில் குறைவான உடலையும் பெற்றிருக்கும்.

# இயேசுவை முத்தமிட்டு காட்டிக்கொடுக்கும் யூதாஸ்காரியோத்து

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.**





விடைகள்:
1. தீப்பந்தம், 2. செருப்பு, 3. தலைசீரா, 4. நிலா, 5. மேலங்கி

# சர்வதேச புத்தக தினம்

*செப் 13*



***வாசிக்கும் பழக்கம் ஓர் மனிதனை முழு மனிதனாக மாற்றிவிடும்...***

***உலகில் வாழ்ந்து மறைந்த மாமனிதர்கள் பலரும் நூல்கள் வழியாகத் தான் வாழ்வின் வெளிச்சத்தை நோக்கி பயணித்தனர்.***

ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்றார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி.

தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் ஜவஹர்லால் நேரு.

என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிறதென்றாராம் பெட்ரண்ட் ரஸல்.

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் நெல்சன் மண்டேலா.

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி லெனின் கூறிட குவிந்த புத்தகங்கள் பல லட்சம்.

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக்கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம் சார்லிசாப்லின்.

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் வின்ஸ்டன் சர்ச்சில்.

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம் மார்டின் லூதர்கிங்.

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் பகத்சிங்.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றார் ஆபிரகாம் லிங்கன்.

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி என்றார் ஜூலியஸ் சீசர்.

உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல் என்றார் டெஸ்கார்டஸ்.

போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா. ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு என்றார் இங்கர்சால்.

சில புத்தகங்களை சுவைப்போம்... சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்! என்றார் பிரான்சிஸ் பேக்கன்.

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே! என்றார் லெனின்.

உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை! என்றார் ஆஸ்கார் வைல்ட்.

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு! என்றார் சிக்மண்ட் ஃப்ராய்ட்.

பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து, அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ என்றார் மாசேதுங்.

கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள பெருங்குளம் கிராமம் தான் இந்த புத்தக கிராமம். கிராமத்தின் தெருக்களில் குருவிக் கூடுகள் போல் அலமாரிகள் செய்யப்பட்டு, அதில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கிராமம் முழுவதும் 11 இடங்களில் இதுபோல புத்தக அலமாரிகள் வைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து கிராம மக்கள் புத்தகங்களை எடுத்துப் படித்து வருகிறார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பயன்படும் வகையில் பல்வேறு தலைப்புகளில் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. கிராம மக்கள் பலர் புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்துவிட்டு, பிறகு அலமாரியில் வைத்துவிடுகின்றனர். மேலும் பலர் புத்தக அலமாரியின் அருகே அமர்ந்து படித்துவிட்டு மீண்டும் அங்கேயே வைத்து விடுகின்றனர். இந்த முறைக்கு தான் 'புஸ்தக கூடு' எனப் பெயரிட்டுள்ளனர். இதே போல, தமிழகத்திலும் சில தமிழ்த் தேசிய கட்சிகளின் முன்னெடுப்பால் பேருந்து நிறுத்தங்களில் பேருந்திற்காக காத்திருக்கும் நேரத்தை பயனுள்ள வகையில் மாற்றிக்கொள்வதற்காக நூல் பேழைகள் தங்கள் கட்சிகளின் கொடிமர கம்பங்களுடன் இணைத்து அமைத்திருப்பதாகவும் அறிய முடிகிறது. கிறிஸ்துவை அறியாத மனிதர்களும் இயக்கங்களும் புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்தும் போது கிறிஸ்தவ சபைகளும் ஊழியங்களும் புத்தக வாசிப்பை பரவலாக ஏன் முயற்சிகள் எடுக்கக்கூடாது. இதனால் எழுத்தாளர்களும் உரிய மதிப்பைப் பெறுவர். அதனால் புதிய படைப்புகளும் நம் கைக்கு வந்து சேர வழிவகுக்கும் என்பதால் மாற்றத்தை விரும்பும் நாம் நமது திருச்சபையிலிருந்து ஒரு நல்ல புதிய துவக்கத்தை மேற்கொள்ள சர்வதேச புத்தக நாளில் உறுதியேற்போம்.



*கொசுறு:* சொல்லகராதிகளின்படி நூல் / "The Book" *என்பது பரிசுத்த வேதாகமத்தை குறிப்பிட்டுள்ளது. ஆம் உலகில் பல நூல்கள் இருந்தாலும் நூல் என்ற அந்தஸ்து பரிசுத்த வேதாகமத்தையே சாரும்.*

# கதை கதையாம் காரணமாம்

''ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே அவர் தோட்டத் தொழிலாளரிடம், 'பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்திமரத்தில் கனியைத் தேடி வருகிறேன்; எதையும் காணவில்லை. ஆகவே இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?' என்றார். தொழிலாளர் மறுமொழியாக, 'ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம்' என்று அவரிடம் கூறினார்'' (லூக்கா 13 : 6-9).


இயேசு இந்த உவமையைக் கூறியதற்கு ஒரு சின்ன பின்னணி உண்டு. அவர் வாழ்ந்த காலத்து யூத மக்களிடையே ஒரு நம்பிக்கை உண்டு. யாராவது நோய்வாய் பட்டாலோ, யாருக்காவது அகால மரணம் நேரிட்டாலோ 'அவர்கள் பாவிகள்' அதனால் தான் இந்த நிலை என மற்றவர்கள் முடிவு கட்டிவிடுகிறார்கள்.

தன்னை நீதிமான்களாக காட்டிக் கொள்பவர்கள் தான் உண்மையிலேயே பாவிகள். அவர்கள் மனம் திரும்ப வேண்டும். மனம் திரும்புதலின் கனியை அவர்கள் கொடுக்க வேண்டும் என்பதையே இயேசு இந்த உவமையின் மூலம் விளக்குகிறார்.

திராட்சைத் தோட்டத்தில் அத்தி மரம் என்பதே அத்தி மரத்துக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வரம். திராட்சைத் தோட்டத்தின் வளங்களையெல்லாம் உறிஞ்சி எடுத்து வளர முடியும். ஏகப்பட்ட இடத்தையும் அதிகரிக்கும். அப்படிப்பட்ட ஒரு அத்தி மரம் கனி கொடுக்காவிட்டால் தோட்ட உரிமையாளருக்கு அதனால் பயன் என்ன ?

இங்கே அத்தி மரம் என்பது யூதர்கள் அல்லாதவர்களுக்குக் கிடைக்கும் மீட்பின் வாய்ப்பு எனலாம். நம்மைப் போன்ற பிற இனத்து மக்கள், கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டவர்கள் அந்த அத்தி மரம் போன்றவர்கள்.

தோட்ட உரிமையாளர் என்பவர் தந்தையாம் இறைவன். அவரே நம்மை நடுகிறவர். உயிர்களை அனுமதிப்பவர் அவரே. தோட்டக்காரர் மகனாகிய இயேசு கிறிஸ்து.



அத்தி மரத்தில் கனி இருக்கிறதா என்று தேடிக் கொண்டு தந்தையாம் கடவுளே வருகிறார். கனி கொடுக்கும் காலம் வந்த பின்புதான் அவர் வருகிறார். அதுவும் தொடர்ச்சியாக மூன்று பருவங்கள் அவர் வருகிறார். கனிகள் காணப்பட வில்லை. எனவே அதை வெட்டி விட முடிவெடுக்கிறார்.

இங்கே. தமது மக்களின் மீது கடவுள் கொள்ளும் அன்பு

வெளிப்படுகிறது. கனியைத் தேடி, தானே மனிதனைத் தேடி வரும் எதிர்பார்ப்பு நிறைந்த தந்தையாய் அவர் இருக்கிறார்.

மகனாம் இயேசுகிறிஸ்து நமக்கும் கடவுளுக்குமிடையேயான மத்தியஸ்தராய் இருக்கிறார். பரமனாகவும், பரிந்து பேசுபவராகவும் அவரே இருக்கிறார். அவர் தந்தையிடம் நமக்காகப் பரிந்து பேசி 'இந்த ஆண்டும் இதை விட்டு வையுங்கள்' என்கிறார்.

இங்கே, இயேசுவின் அளவிட முடியாத அன்பு வெளிப்படுகிறது. இது வரை கனிதராத மரத்தையும் அன்பு செய்கிறார். அது இனியாகிலும் கனி தரும் என எதிர்பார்க்கிறார். அதற்காக ,'சுற்றிலும் கொத்தி எரு போடுவேன்' என களமிறங்குகிறார்.

இயேசு நாம் கனிகொடுக்க வேண்டுமென இடை விடாமல் பணி செய்கிறார். நாம் வாழ்கின்ற நிலத்தைப் பண்படுத்துகிறார். நாம் வரங்கள் உறிஞ்சும் மரமாய் இருக்க உரத்தை நிரப்புகிறார். ஒரு மரம் கனி கொடுக்க என்னென்ன தேவையோ அனைத்தையும் தொடர்ந்து செய்கிறார்.

இப்போது கனி கொடுக்காமல் இருக்க நம்மிடம் சாக்குப் போக்கு எதுவும் இல்லை. நிலம் சரியில்லை, நீர் கிடைக்கவில்லை போன்ற சால்ஜாப்புகள் இனிமேல் சொல்ல முடியாது. அப்போதேனும் கனி கொடுக்கிறோமா ?

கனி உடைய மரங்களைக் கண்டு பிடிப்பது எளிது. வாசனை காற்றில் மிதந்து வந்து நம்மை அழைக்கும். கனிகளின் வசீகரம் கண்ணில் தோன்றி நம்மை ஈர்க்கும். அல்லது பறவைகள் அந்த மரத்தின் தலையில் வட்டமிடும். கனி கொடுக்கும் வாழ்க்கை, மலை மேல் இருக்கும் ஊரைப் போன்றது. அது மறைவாய் இருக்க முடியாது.

அப்படி எந்த அடையாளமும் இல்லாத வாழ்க்கையை நாம் வாழும் போது நம்மிடம் கனி இல்லை என்று பொருள். எனினும் தந்தை வந்து நம்மிடம் 'ஒரு கனியாவது' கிடைக்காதா எனும் ஏக்கத்தோடு தேடுகிறார். கிடைக்கவில்லை.

இனிமேல் இதை வெட்டி விட வேண்டியது தான் என முடிவெடுக்கிறார் தந்தை. இறைவனின் வரங்களையும், அவரிடமிருந்து எல்லா நன்மைகளையும் பெற்று நாம் வளர்கிறோம். அத்தி மரம் போல எல்லா உரத்தையும், நீரையும், காற்றையும், ஒளியையும் வீணாக்குகிறோம். இலைகளையும், கிளைகளையும் கவனிக்கும் அவசரத்தில் கனிகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து விடுகிறோம்.

கனி கொடுக்காத வாழ்க்கை என்பது நமக்கு மட்டுமான இழப்பல்ல. சமூக இழப்பு. அத்தி மரம் திராட்சைச் செடிகளுக்கான உரத்தைத் தின்று கொழுக்கிறது. அத்தி மரம் இல்லாமல் இருந்திருந்தால் திராட்சையாவது சில கனிகளை அதிகமாய்க் கொடுத்திருக்கும். இப்போது அதுவும் இல்லை.

அத்தி மரம் வெட்டப்படும் என்பது இந்த உவமை சொல்லும் முத்தாய்ப்புச் செய்தி. வாய்ப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டே இருக்காது. வெட்டப்படும் நாள் ஒன்று உண்டு. இப்போது நடப்பவை கூடுதலாய்க் கிடைத்திருக்கும் காலம். கிருபையின் காலம். இந்த கிருபையின் நாட்களிலாவது கனி தராவிடில் மரம் தறிக்கப்படுவது நிச்சயம்.

கனி கொடுத்தால் விண்ணக வாழ்வாகிய மீட்பு.

கனி தர மறுத்தால் நெருப்பு நரகத்தில் அழிவு.

நமது வாழ்க்கையை மறு பரிசீலனை செய்வோம். நமது வாழ்க்கை கனிதரும் வாழ்வாய் இருக்கிறதா? நாம் கனிதர இறைமகனின் உதவியை நாடுகிறோமா? நமது வாழ்க்கை இறைவனுக்கு ஏற்புடையதா இல்லை ஏமாற்றமுடையதா? பிறரைத் தீர்ப்பிடும் மனநிலையிலிருந்து திருந்தியிருக்கிறோமா? நம்மை நாமே ஆராய்கிறோமா?

# வசனம் பொய் சொல்லாது

11 ஆண்டுகளுக்கு முன்பு புதியதலைமுறை இதழில் பிரக்ஞானந்தாவின் நேர்காணல் கண்டேன். அப்போது Chennai Open Competition என்று நினைக்கிறேன். அதில் வென்ற ஏழெட்டு வயதேயான குட்டி பையனாக குறும்புத்தனமாகப் பேசினான். பேட்டி முழுக்க அவனுடைய அம்மாதான் அதிகமாய் பேசி இருப்பார். அப்போதே மகனை விட அந்த அம்மாவுக்குதான் நீண்டகால கனவுகளும் ஆர்வமும் திறமைசாலியான தன் மகனை உலக செஸ் சாதனையாளர் விஸ்வநாதன் ஆனந்தைப் போல ஆக்கவேண்டும் என்கிற இலக்கும் இருந்ததை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதை அந்தப் பேட்டியிலும் சொல்லி இருப்பார். இந்தப்படத்திலும் அந்த அம்மாவின் ஆர்வத்தைப் பார்க்க முடியும். தன்னுடைய வாழ்க்கை மொத்தத்தையும் தன் மகனின் கனவுகளுக்கே ஒப்புக்கொடுத்தவரின் தொடக்ககாலம் அது.

அவனுடைய அடுத்தடுத்த வெற்றிகளுக்கு பிறகு முழுவதுமாக அவனை சதுரங்கத்துக்கு ஒப்புகொடுத்தார். மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்த பையனை மேலும் மேலும் முன்னேற்ற ஒவ்வொரு சர்வதேச போட்டிக்கும் ஸ்பான்சருக்காக அலைந்து திரிந்த அந்த அன்னையின் அலைச்சலைப் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால் அத்தனை அலைச்சல்களிலும் ஒருநாளும் மனதை தளரவிடாது விடாப்பிடியாக இருந்தார். எல்லா கதவுகளையும் தட்டிக்கொண்டே இருந்தார்.

இன்று மகன் மிகப் பெரிய உயரத்தை எட்டி இருக்கிறான். இரண்டாமிடம் என்றாலும் பிரக்ஞானந்தா எட்டி இருக்கிற உயரம் மிகப்பெரியது. அந்த உயரத்திற்கு பின்னால் நாகலட்சுமி என்கிற அந்த அம்மாவின் உதிரமும் உழைப்பும் இருக்கிறது.

**கொசுறு:**

*கார்ல்சன் Mentality Monster என்று அருமையாக சொல்லி இருந்தார். அதே போல, எதிர்கால செஸ் உலகம் பாதுகாப்பான கைகளில் இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்.*

*இந்த நூற்றாண்டின் இணையற்ற வீரரிடம் இவ்வளவு தூரம் பாராட்டு பெறுவது சாதாரணமான விஷயம் இல்லை.*

*இந்திய செஸ் சேனல்களை விட Agadmator என்னும் வெளிநாட்டு யூடியூபர் தான் அவரை ஆரம்பம் முதல் சிலாகித்து பாராட்டி ஊக்குவிக்கும் வேலையை செய்து வந்தது. அவர் கொடுத்த பட்ட பெயர் தான் praggu. ஆனால் நம் ஊர் செய்தி ஊடகங்களுக்கு இப்போது தான் அவர் கண்ணில் படுகிறார்.*




**ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகை செய்யும் என்று நீதிமொழிகள் 12:24இல் சொல்லப்பட்டுள்ள வேத வாக்கு மெய்தானே.**

# பிதாக்களே!

ஒரு நூலில் இடம் பெற்றிருக்கும் தரமான ஒரு சொல் அது யாதெனின் "POWERFUL PEOPLE COME FROM POWERFUL PLACES", இந்த சொல்லை நான் சொல்ல போகும் இந்த கட்டுரைக்கு ஏற்ப மாற்றம் செய்தோமேயானால், "POWERFUL WORDS COME FROM POWERFUL PEOPLE" என்றே சொல்ல வேண்டும். ஆம், ஒரு சிறு பொய்யினால், தனது மகனின் விதியையே மாற்றியமைத்த ஒரு தாயின் வைராக்கியத்தை பற்றியே தங்களுடன் இன்று பகிர போகிறேன்.



இந்த உலகம், இதுவரை எத்தனையோ அறிவியலார்களை கண்டுள்ளது. அவர்களது அணைத்து கண்டுபிடிப்புகளும் இன்று நமது வாழ்வில் ஏதோ ஒரு வகையில் அங்கம் வகித்து கொண்டே தான் இருக்கிறது. இன்னும் சுருக்கமாக சொல்லவேணுமானால், இந்த நவீன உலகமே, இத்தகைய கண்டுபிடிப்புகள் இல்லையானால் இல்லை என்று சொன்னாலும், அதுவே சரியாகும். எனினும், நமக்கு அறிவியலாளர்கள் என்றாலே, நம்மில் பலருக்கு சட்டென்று நினைவுக்கு வரும் ஒரு பெயர் என்றால் அது "THOMAS ALWA EDISON" என்று சொன்னால் அதை யாராலும் மறுக்க இயலாது. மூன்று நான்கு தலைமுறைகள் கடந்தும், இன்னும் நமது உள்ளத்தில் அவரது பெயர் ஒலித்து கொண்டிருக்க காரணம்? அவரது கண்டுபிடிப்புகள் நமது அன்றாட வாழ்வில் இன்றளவிலும் பயன்பாட்டில் இருப்பது மட்டுமின்றி, அத்தகைய கண்டுபிடிப்புகளை உருவாக்க அவர்கள் மேற்கொண்ட சிரமங்கள், முயற்சிகள் ஆகியவைகளே ஆகும். சரி இப்போதைக்கு கதைக்கு வருவோம்.

எடிசன் தனது பள்ளி படிப்பை ஆரம்பித்து சுமார் ஒரு மூன்று மாதங்கள் இருக்கும், அப்போது அவரது பள்ளியில், அவரிடம் ஆசிரியர் ஒரு கடிதம் கொடுத்து, இதை திறந்து பார்க்காமல் உன் தாயாரிடம் கொண்டு குடு என்று சொல்லி வீட்டுக்கு அனுப்புகிறார். அவரது தாயாரோ, அந்த கடிதத்தை படித்து பார்த்து விட்டு கண்ணீர் மல்க தனது மகனை பார்த்து அக்கடிதத்தில் உள்ளவற்றை சொல்கிறார், "Your son is a genius. This school is too small for him and doesn't have enough good teachers for training him. Please teach him yourself." அதை கேட்ட எடிசனுக்கோ மனதுக்குள் ஒரே ஆனந்தம், பின்னர் அவரது பள்ளி படிப்பை தனது தாயார் மூலமே கற்று தேர்கிறார், எடிசன். பின்னாளில், பல துறைகளில், பல கண்டுபிடிப்புகளுக்கு காரணமாக அமைந்தது அவரது தாயாரின் ஊட்டமான கல்வியும், அவரது ஆறுதலான வார்த்தைகளும்.

இன்று நாம் வீடுகளில் பயன்படுத்தும் மின் விளக்கின் மாதிரியானது "Humphry Davy" என்னும் அறிவியாளரால் 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டது, இருப்பினும் அது சாதாரண நுகர்வோர் பயன்படுத்தும் வண்ணம் இல்லாமையால், அத்தகைய மின் விளக்குகள் வெறும் ஆய்வகத்தில் மட்டுமே பயன்பாட்டில் இருந்து வந்தது.

பின்னாளில் அந்த மாதிரியை அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் மிகவும் எளிமையாகவும், கம்மியான பொருட்செலவிலும் மாற்றியமைத்த பெருமை எடிசனையே சாரும். இதற்காக 3000-ம் மேற்பட்ட மாதிரிகளை சோதித்து, 2 வருட கடின உழைப்பிற்கு பின் "Carbon Filament Bulb" என்னும் மாதிரியை நமக்கு வழங்கினார் எடிசன்.

இவ்வாறாக செல்ல ஒரு நாள், அவரது தாய் வயதான காலத்தில் நோய்வாய் பட்டு இறக்கிறார். அப்போது அவரது தாயாரின் நினைவான, அவரது பழைய பெட்டியை திறந்து பார்க்கும் நேரம், எடிசனுக்கு கிட்டுகிறது. அதனுள் அவரது பள்ளி பருவத்தில், அவரது தாயாருக்கு பள்ளியில் குடுத்த கடிதம் கிடைக்கவே அதை திறந்து பார்த்து படித்த, எடிசனுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது, காரணம்??? அதில் இவ்வாறான வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தது "Your son is mentally ill. He can no longer attend our school. He is expelled.". அவரது தாயார் மட்டும் அன்று கடிதத்தில் உள்ளதை உள்ளவாறு படித்து காண்பித்து பின் கண்டித்திருந்தால், இன்றளவிலும் நமது உலகம் இருண்டே இருந்திருக்கும்.

ஆகவே பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்கு கோபமூட்டாதிருங்கள். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தான் பிள்ளைகளை அடித்து வளர்க்க வேண்டி இருந்தது (நீதிமொழிகள் 23.13-14). ஆனால் புதிய ஏற்பாட்டிலோ பெற்றோர்கள் பிள்ளைகளை அன்பினால்தான் வளர்க்க வேண்டும் என்ற புதிய உடன்படிக்கை நமக்கு உண்டு. அன்பான வார்த்தைகளினால் புத்தி சொல்ல வேண்டும். அடிப்பதற்கு அதிகாரம் இல்லை என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளை கண்டிக்கலாம். ஆனால் தண்டிப்பதால் தாமஸ் ஆல்வா எடிசன்கள் உருவாவது தடைபடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

# விடுகதைகள்

1. அந்தக் குருவிகளுக்கு பீடங்களில் வீடு கிடைத்தது. அது எந்த குருவிகளுக்கு?
2. தத்தி தத்திச் செல்வேன். தளிர்களை தின்பேன் பார்வோன் மண்ணின் நிலங்களை பாழ்ப்படுத்தினேன். யார் நான்?
3. நீரிலும், நிலத்திலும் இருப்பேன். எனது நிறமோ வெள்ளை. என் கால்கள் குச்சிப் போல் இருக்கும். நான் யார்?
4. நான் மரத்தில் தொங்கலாடுவேன். தலை கீழாய் இருப்பேன். இரவில் மட்டும் என் கண் கூர்மையாக இருக்கும். எனது பெயர் என்ன?
5. ஒற்றைக் காலில் நின்ற தவம் செய்வேன். ஒயிட்டாக இருப்பேன். நீர் நிலைகளே என் வட்டாரம். நான் யார்?
6. நாங்கள் உயர்ந்த மாடக் கோபுரங்களில் வசிப்போம், அழகாய் இருப்போம், பயந்த குணம் எங்களுக்குண்டு. நாங்கள் யார்?
7. நான் நாட்பறவை நாட்டியத்தில் சிறந்தவன். நாடு போற்றுபவன், விலை மதிப்புள்ளவன். சண்டையில் வல்லவன் சிறிது தூரம் பறப்பவன். தேசமே என்னைக் கொண்டாடும். நான் யார்?
8. எனக்குத் தாய் பாசம் அதிகம் உண்டு. ஆபத்தான வேலையில் என் குஞ்சுகளை என் இறக்கைக்குள் வைத்து மூடிக் கொள்வேன். நான் யார்?

விடைகள்: 1. அடைக்கலாங் குருவி (சங்கீதம் 84:3), 2. வெட்டுக்கிளிகள், சுவர்க்கோழி (யாத்திராகமம் 10:13-15, லேவியராகமம் 11:22), 3. நாரை (வேழாம்பல்) கொக்கு (ஏசாயா 34:11, எரேமியா 8:7,8) 4. வௌவால் (லேவியராகமம் 11:13), 5. கொக்கு (எரேமியா 8:7, சங்கீதம் 104:17), 6. புறா (ஆதியாகமம் 15:9, உன்னதப்பாட்டு 2:14, மத்தேயு 3:16, 10:16), 7. மயில் (1 இராஜாக்கள் 10:22), 8. கோழி (மத்தேயு 23:37, லூக்கா 13:34).

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. வெளி 22:12

# வரைபடங்களுடன்

# கடைசிகாலச் செய்திகள்

Elim GRC

கிழ்க்கண்ட தலைப்புகளில் செய்திகள் கொடுக்கப்படும்

**02 OCT** — அநாதிகாலச் செய்திகள்
தேவன் ஒருவர் உண்டா? என்ற கேள்விக்கு பதில்

**03 OCT** — தூதர் காலம் அறியப்படாத காலச் செய்தி
பேய் பிசாசுகள் எப்படி வந்தன? பூமி, வானம் எப்படி
உண்டானது? பூமியில் உண்டான மாற்றங்கள் என்ன?

**04 OCT** — சீர்திருத்த காலம், குற்றமில்லாத காலச் செய்திகள்
ஆறு நாட்கள் படைப்பின் ஆவிக்குரிய
ரகசியம் விலக்கப்பட்ட கனியின் விவரங்கள்

**05 OCT** — மனசாட்சி காலம், நியாயப்பிரமாண காலம்
மரித்தபின் மனிதன் எங்கே? அவன் சொல்லும்
பாதாளம் பரதீசின் செய்திகள்

**06 OCT** — கிருபையின் காலச் செய்திகள்
கிறிஸ்துவின் வருகையும், பரிசுத்தவான்கள் எடுத்துக்
கொள்ளப்படுதலும், கைவிடப்பட்டவர்களின் பரிதாப நிலையும்

**07 OCT** — அந்திக்கிறிஸ்துவின் காலச் செய்திகள்
666 முத்திரை, உலகில் நடக்கும் மகா உபத்திரவம்
உலகில் தோன்றிய வல்லரசு நாடுகள்

**08 OCT** — 1000 வருட அரசாட்சி காலம் நித்திய காலச் செய்திகள்
பரிசுத்தவான்களின் ஆளுகையின் மேன்மை,
தேவனின் நியாயத்தீர்ப்பு நித்திய நரகம்

அக்டோபர்
**OCTOBER**
**2-8**
திங்கள் முதல் ஞாயிறு வரை
தினமும் மாலை
6:00 மணி முதல் 8.30 மணி வரை



PASTOR
**OSBORNE JEBADURAI**



PASTOR
**Y.K.P. HENRY**

## ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.
9884908777, 9003067777

Elim GRC


நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும்
சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.
எசேக்கியேல் 22:30

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# தொடர் ஜெப
# எழுப்புதல் ஆராதனை

**செப்டம்பர் 18**
**9AM - 2PM**
**அரசாங்க விடுமுறை**

**ஆசீர்வாதமான**
**மதிய உணவு உண்டு**




**ஏலிம்**
**மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
50,இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம்,சென்னை - 600024.
9884908777,9003067777